**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 26/2010 P.W. 7/L.W.11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. செல்வராஜ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. ஞானமணி | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 04.02.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் காவல் துறையில் பணிபுரிந்து பணி ஓய்வுபெற்றுவிட்டேன். இதற்கு முன்பு குளச்சல் காவல்நிலையத்தில் 2009 ம் வருடம் தலைமை காவலராக பணிபுரிந்த போது 31.05.2009 ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு குளச்சல் காவல்நிலைய பொதுநாட்குறிப்பு பொறுப்பில் இருக்கும் போது சாஸ்தான்கரையைச் சார்ந்த அந்தோணிபிள்ளை மகன் மரிய ரேமண்ட் மற்றும் அவருடைய நண்பர் குளச்சல் லியோன் நகரைச் சார்ந்த மரிய நாயகம் மகன் மரிய நிக்சன் என்பவர்கள் காயங்களுடன் காவல்நிலையம் வந்து மரிய ரேமண்ட் என்பவர் புகார் மனுக்கொடுத்தார். அந்த புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண்.142/2009 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அதன் பிறகு காயம்பட்ட நபர்களை மருத்துவ நமூனா எண் 59/2009 ஆக கொடுத்து குளச்சல் அரசு மருத்துவமனைக்கு சிகிட்சைக்காக அனுப்பி வைத்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணைச் செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

1. 31.05.2009 ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு புகார் மனுக்கொடுத்தார்கள். புகார் மனு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் தேதி

குறிப்பிடப்பட்ட நிலையில் அது மேலேழுதப்பட்ட நிலையில் மேலொப்பம் எதுவும் இடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் ராஜா என்று தான் சொல்லப்பட்டு அதன் அருகில் மேக்ளின் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் மேக்ளின் ராஜா மற்றும் கண்டால் தெரியும் 3 நபர்கள் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. காவல்நிலையத்திலிருந்து தான் நாங்கள் மருத்துவமனைக்கு தகவல் கொடுத்தோம். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கையானது பதிவுச் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.